# ஆறு ஆண்டுகளில் 2,50,000 பெருவாழ்வு தரும் பெருமரம்



வானம் பார்த்த பூமி வறண்டு போன நிலம் அளவுக்கு அதிகமாக ரசாயன உரங்களைப் போட்டதால் துவண்டு போன மண், என்றிருக்கும் நிலங்களை வைத்துக் கொண்டிருக்கம் விவசாயிகள் பலரும், ‘இதை வெச்சு என்னத்த செய்ய”. என்றுதான் புலம்பிக் கொண்டிருப்பார்கள். ஆனால், அவர்களுக்கெல்லாம் விடிவெள்ளியாக முளைக்கிறது... பெருமரம்.

பீயன், பீநாரி, பீதனக்கன் என்று பல பெயர்களில் அழைக்கப்படும் இந்த பெருமரம், தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு முக்கிய மூலப்பொருளாக இருக்கிறது. இதன் காரணமாகவே இதன் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

**இனி, வணிகரீதியாக பெருமரத்தைப் பயிரிடுவது எப்படி என்று பார்ப்போமா?**

**வறண்ட பகுதிக்கு வரப்பிரசாதம்:**

செம்மண. சரளை, சுண்ணாம்பு நிலங்கள், கடற்கரை மற்றும் ஆற்றோரப் பகுதிகளில் பெருமரங்கள் நன்றாக வளர்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை அனைத்துப் பகுதிகளிலும் நடவு செய்யலாம். மனாவாரி நிலங்கள், வேலி ஒரங்களிலும் வளர்க்கலாம். ஆனால், காற்று அதிகமாக வீசும் பகுதிகளில் மரம் முறிந்து விடும் அபாயம் இருக்கிறது. சமயங்களில் வேரோடுகூட சாய்ந்து விடும். அதனால், இதுபோன்ற பகுதிகளில் பெருமர சாகுபடியைத் தவிர்ப்பது நல்லது.

தண்ணீர் வசதி உள்ள நிலங்களில் எப்போது வேண்டுமானாலும் நடவு செய்யலாம். மானாவாரி நிலங்கள் என்றால், மழ தொடங்கும் பாலங்களில் நடவு செய்ய வேண்டும். வறண்ட பகுதிகளுக்கும் வரப்பிரசாதமாக இருக்கும். இம்மரத்தை ஒரு முறை நடவு செய்து விட்டால்போதும், அறுவடை முடிந்த பிறகு போத்து மூலம் தொடர்ந்து வருமானம் கொடுத்துக் கொண்டே இருக்கும்.

**ஏக்கருக்கு 300 கன்றுகள்:**

12 அடிக்கு 12 அடி இடைவெளியில், இரண்டு கன அடி அளவுக்குக் குழியெடுக்க வேண்டும். ஒரு ஏக்கரில் 300 குழிகள் வரை எடுக்கலாம். ஒவ்வொரு குழியிலும் 1 கிலோ மண்புழு உரம், 30 கிராம் வேர்வளர்ச்சி உட்பூசணம் (வேம்), 1 கிலோ தொழுவுரம், 15 கிராம் அசோஸ்பைரில்லம், 15 கிராம் பாஸ்போ பாக்டீரியா ஆகியவற்றைக் கலந்து

வைத்து, கன்றுகளை நடவு செய்ய வேண்டும். நடவு செய்து ஒரு மாதம் வரை வாரம் ஒரு முறை பிறகு 15 நாட்களுக்கு ஒரு முறையும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

**வறட்சிப் பகுதிக்கு வட்ட நடவு:**

வறட்சியானப் பகுதிகளில் வளர்க்க விரும்புபவர்கள் வட்டவடிவ நடவு செய்வது நல்லது 6 மீட்டர் விட்டம் கொண்ட வட்டப் பரப்பில், கன்றுகளுக்கு இடையே 3 மீட்டர் இடைவெளி இருப்பதுபோல நடவு செய்யலாம். அதாவது, வட்டத்தின் பரிதியில் மூன்று மீட்டர் தூரத்துக்கு ஒன்று என ஒரு அடி ஆழத்தில் வட்டமாக குழியெடுத்துக் கொள்ள வெண்டும். ஒவ்வொரு குழிக்கும் 3 கன்றுகளை நட வேண்டும். அடுத்தடுத்த வட்டங்கள் நெருக்கமாகவே அமைக்கப்பட வேண்டும். இரண்டு வட்டங்களின் மையத்துக்கு இடையேயான தூரம் 6 மீட்டர் இருக்க வேண்டும். (முதல் வட்டத்தின் மையத்தில் இருந்து அடுத்த வட்டத்தின் மையம் வரை, பார்க்க, படம்). இப்படிச் செய்வதால் மழைக்காலங்களில் குழிகளில் சேகரமாகும் தண்ணீர், செடியின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். இந்த முறையில் ஏக்கருக்கு 3000 கன்றுகள் வரை நட முடியும்.

**ஒரு டன் 2,500 ரூபாய்:**

பராமரிப்புக்காக அதிகம் கஷ்டப்படத் தேவையில்லை. நடவு செய்த 6 ம் ஆண்டில் அறுவடை செய்யலாம். தரிசு நிலங்களில் வளர்க்கப்பட்ட மரங்கள் எனில், ஒரு மரம் சுமார் 300 கிலோ முதல் 500 கிலோ எடை வரை இருக்கும். இறவையில் வளர்க்கப்பட்ட மரம் எனில், சுமார் 500 கிலோ முதல் 750 கிலோ எடை வரை இருக்கும். ஒரு டன் மரத்தின் குறைந்தபட்ச சந்தை மதிப்பு 2,500 ரூபாய். மானாவாரியில் உள்ள 300 மரங்கள் மூலம்

சராசரியாக 100 டன் மகசூல் கிடைப்பதாக வைத்துக் கொண்டாலும், 2,50,000 ரூபாய் வரை வருமானம் கிடைக்கும். இறவையில் உள்ள 300 மரங்கள் மூலம் சராசரி 150 டன் மகசூல் கிடைப்பதாக வைத்துக் கொண்டால், 3,75,000 ரூபாய் வருமானம் கிடைக்கும்.

**ஐந்தே ஆண்டில் அருமையான வருமானம்:**

பெரு மரத்தை 3 ஏக்கரில் நடவு செய்துள்ள கோவில் பட்டியைச் சேர்ந்த லிங்கம் நாயக்கர் சொல்வதைக் கேட்போமா.

“அஞ்சு வருஷத்துக்கு முன்ன ஏக்கருக்கு 300 மரங்கள் வீதம் ஒண்ணரை ஏக்கர்ல தீக்குச்சி மரத்தை (பெருமரம்) நட்டேன். 15 நாளைக்கு ஒரு தடவை தண்ணி கொடுப்போம். மத்தபடி வேறெந்த பராமரிப்பும் பாத்தததில்லை. கொஞ்ச நாளைக்கு முன்ன 22 மரங்களை மட்டும் வெட்டி வித்தேன். மொத்தம் ஆறரை டன் எடை இருந்திச்சு, கம்பெனிக்காரங்களே தோட்டத்துல வந்து வெட்டிக்கிட்டு ஒரு டன் மரத்துக்கு 4,100 ரூபாய்னு விலை கொடுத்தாங்க. மீதியிருக்கற மரங்கள் 100 டன் வரும்னு சொன்னாங்க. இந்தக் கணக்குப்படி பார்த்தா நாலு லட்ச ரூபாய்க்கு மேல வருமானம் கிடைக்கும்.

இந்த மரத்துக்குள்ள கிராக்கியைப் பாத்துட்டுதான், போன வருஷம் ஒண்ணரை ஏக்கர்ல நட்டுட்டு, ஊடுபயிரா பருத்தி போட்டேன். என்னைப் பொறுத்தவரைக்கும் ஒரு தடவை நட்டு, தண்ணி மட்டும் கொடுத்துக்கிட்டு இருந்தா அஞ்சே வருஷத்துல அருமையான வருமானம் கொடுக்குற அற்புதமான மரம் தீக்குச்சி மரம்தான். இடையில மூணு வருஷம் வரைக்கும் ஊடுபயிர் சாகுபடியும் செஞ்சிக்கலாம், அடுத்தடுத்து மறுதாம்ப மூலமாகவும் வருமானம் எடுத்துக்கிட்டே இருக்கலாம்.”

லிங்கம் நாயக்கர் சொன்னதை மனதில் ஏற்றிக் கொண்டீர்கள்தானே சிவகாசி, கோவில்பட்டி, குடியாத்தம் போன்ற ஊர்களில் உள்ள தீக்குச்சி தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறைய இருக்கின்றன. முன்பு இந்தத் தொழிலுக்கு ரப்பர் மரங்களை அதிகளவில் பயன்படுத்தி வந்தனர். தற்போது அந்த மரத்தின் விலை அதிகரித்து விட்டதால், தீக்குச்சித் தொழில் தற்போது பெருமரத்தை மட்டுமே நம்பி உள்ளது என்பதைக் கவனத்தில் கொண்டால், இந்த மரத்துக்கான விற்பனை வாய்ப்பு உங்களுக்குப் புரிந்துவிடும்.

**காய விட்டா காசு போயிடும்:**

கோவில்பட்டியில் தீக்குச்சி தயாரிக்கும் நிறுவனம் வைத்திருக்கும் சுப்பிரமணியன் சொல்வதையும் கேட்டுவிடுங்களேன்.

“பெருமரத்துக்கு நல்ல கிராக்கி இருக்கு. மரங்களை வெச்சிருக்கவங்க வெட்டி கம்பெனியில கொண்டு வந்து கொடுத்தா ஒர டன்னுக்கு அதிகபட்சம் 5,500 ரூபாய் வரைக்கும் கொடுத்து எடுத்துக்குவோம். 16 அங்குலம் முதல் 100 அங்குலம் சுற்றளவு உள்ள மரங்களை மட்டும்தான் வாங்குவோம். அதேபோல மரங்களை வெட்டுனதும் உடனே கம்பெனிக்கு கொண்டு வந்துடணும். அதிகபட்சம் ஒரு வாரத்துக்குள்ள கொண்டு வரலைனா அது தீக்குச்சி செய்யப்படாது. இதுக்கு அதிக தேவை இருக்கறதால விவசாயிங்க தாராளமா நடவு செய்யலாம்.”

என்ன எல்லா கணக்கு வழக்கும் புரிந்து விட்டதுதானே. அடுத்து வரக்கூடிய மாதங்கள் மரக்கன்றுகள் நடுவதற்கு ஏற்ற மழை மாதங்கள். மானாவாரி நிலங்களில்

பெருமரத்தை நடவு செய்ய நினைப்பவர்கள், இந்தக் காலத்திலேயே நடுவதுதான் புத்திசாலித்தனம்.

**தொடர்புக்கு:**

சுப்பிரமணியன் -

அலைபேசி: 94431-23515

லிங்கம் நாயக்கர், அலைபேசி: 98891-10679

---

**ஆதாரம்:** பசுமை விகடன் வெளியீடு 25.06.11 www.vikatan.com